**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No. 71/2022 |
| Deposition of witness | | PW- 2/LW- 5 |
| Name | | திரு.சுரேஷ்குமார் |
| Father's Name | | திரு.குருநாதன் |
| Village | | பட்டுக்கோட்டை |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 42/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 5th day of March 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற காவலர் திரு.புண்ணியமூர்த்தி SSI என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பட்டுக்கோட்டை சீனிவாச நகரில் குடியிருந்து வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கு சம்மந்தமாக தெரியாது. என் முன்பாக எந்த பொருளையும் கைப்பற்றவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம், கைபற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.** 2 மற்றும் **அ.சா.ஆ.** 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், போலிசார் விசாரணையில் கடந்த 05.02.2019 ந் தேதி இரவு எனது சொந்த வேலையாக இருசக்கர வாகனத்தில் யபுரம் சென்று கொண்டு இருந்தபோது இரவு 11.00 மணியளவில் போலிசார் பெருமாள் கோவில் காட்டாறு அருகே ஒருவரை போலிசார் விசாரணை செய்து அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ராஜாமுகமது மற்றும் என் முன்னால் பின்னர் பெயர் கேட்டு தெரிந்த ஜேம்ஸ் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தார். பின்னர் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தேதி 23.40 மணிக்கு வழக்கின் தடயப்பொருளான ஊதா மற்றும் வெள்ளை நிற கைப்பிடி போன்ற கத்தி ஒன்று எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.900 ஆகியவற்றை போலிசார் எங்கள் முன்னிலையில் கைபற்றினார்கள் அதில் நானும் என் நண்பர் ராஜாமுகமதும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைபற்றுதல் மகசரில் கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரிகள் தெரிந்த நபர் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரிகளை குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை இல்லை</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு. த.சுதர்சன்,எம்.ஏ,,.எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை